முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்
முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண். 8/2024
in
இடைநிலை மனு எண். 2/2023
in
அசல் வழக்கு எண்.741/2023

சரஸ்வதி ... மனுதாரர்/மனுதாரர்/வாதி

//எதிர்//

1. ராஜ்குமார்
2. செல்வம் ... எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்/ 5 மற்றும் 6 பிரதிவாதிகள்

இந்த மனு 12.12.2024 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மெய்கண்டமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

**உத்தரவு**

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் 5–வது எதிர்மனுதாரர்/ 5–வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல்

செய்யப்பட்டுள்ள பதிலுரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u> :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரங்கள் கோரியும், பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் 5-ம் எதிர்மனுதாரர்/5-ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர் வழக்குரையில் வாதியின் தந்தை முத்து, சேலம் சாப்ட்வேர் டெக்னோ டெவலப்மென்ட் அறக்கட்டளைக்கு ஆதரவாக, ஆவண எண்.375/2007-ன் கீழ் கிரயபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்பது போன்ற சில புதிய விஷயங்களை எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியின் தாத்தா கந்தசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் குறித்து கிரயம் செய்து வைக்க மனுதாரர்/வாதியின் தந்தைக்கு எவ்வித உரியும் இல்லை. எனவே, மேற்படி கிரயப்பத்திரம் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. வாதியின் பாதி பங்கை பொறுத்து மேற்படி கிரயபத்திரம் செல்லாது. எனவே மனுவை அனுமதிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் கூறப்பட்டுள்ள விபரங்களின் சுருக்கம் பின்வருமாறு :</u>-

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையில் ஒப்புக் கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. கடந்த 27.04.2002-ம் தேதி மனுதாரரின் தந்தை முத்து மற்றும் அவரது சகோதரர்களான நல்லப்பன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களுடன் சேர்ந்து தாவா

சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். 27.04.2002−ம் தேதியிலிருந்து தாவா சொத்து முத்து என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து ஆகும். முத்து என்பவர் 08.02.2007−ம் தேதி சேலத்தில் உள்ள சாப்ட்வேர் டெக்னோ டெவலப்மென்ட் டிரஸ்ட் ஒன்றிற்கு அதன் தலைவர் வீரபாண்டி ஆறுமுகம் மூலம் தாவா சொத்துக்களை விற்பனை செய்துள்ளார். முத்து என்பவர் 08.02.2007 ம் தேதி, சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், கண்டர்குலமாணிக்கம் கிராமத்தில், சர்வே எண்.61/5 −ல் ஏக்கர் 3.27 சென்ட் நிலத்தை ஒரு செங்கோடன் பழனிசாமி ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். மேற்குறிப்பிட்ட சொத்துக்களில் மட்டும் பாகம் பெற மனுதாரருக்கு உரிமை உள்ளது. வழக்கு சொத்துக்களில் பாகம் கோர மனுதாரருக்கு உரிமை இல்லை. வாதி சட்டப்பூர்வ பெண் வாரிசாக இருந்தாலும் 20.12.2004 க்கு முன்பாக உடமை மாற்றம் ஏற்பட்டு இருந்தால் வாதியின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. மனுதாரரின் தந்தை முத்துவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை. வழக்கு பகுதி பாக பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல. அவசிய தரப்பினர்களை அசல் வழக்கில் சேர்க்காத காரணத்தினால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :−

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **<u>தீர்வு :−</u>**

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151−ன் கீழ் 5−வது எதிர்மனுதாரர்/ 5−வது பிரதிவாதி தரப்பில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள எதிருரைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், இடைநிலை மனுவில் 5-ம் எதிர்மனுதாரர்/5-ம் பிரதிவாதி கூடுதல் எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி கூடுதல் எதிருரையில் வாதியின் தந்தை முத்து, சேலம் சாப்ட்வேர் டெக்னோ டெவலப்மென்ட் அறக்கட்டளைக்கு ஆதரவாக, ஆவண எண்.375/2007-ன் கீழ் கிரயபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்பது போன்ற சில புதிய விஷயங்களை கூறப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/வாதியின் தாத்தாவான கந்தசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் குறித்து கிரயம் செய்து வைக்க மனுதாரர்/வாதியின் தந்தைக்கு எவ்வித உரியும் இல்லை என்றும், எனவே, மேற்படி கிரயப்பத்திரம் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், வாதியின் பாதி பங்கை பொறுத்து மேற்படி கிரயபத்திரம் செல்லாது என்றும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் 27.04.2002-ம் தேதி வாதியின் தந்தை முத்து என்பவரின் சகோதரர்கள் நல்லப்பன் மற்றும் ஆறுமுகம் ஆகியவர்கள் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் சொத்துக்களை பிரித்து கொண்டனர் என்றும், 08.02.2007-ம் தேதி முத்து என்பவர் தாவா சொத்துக்களை டிரஸ்ட்டின் தலைவர் வீரபாண்டி ஆறுமுகம் என்பவருக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றும், 08.02.2007 ம் தேதி முத்து என்பவர் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கண்டர்குலமாணிக்கம் கிராமத்தில் சர்வே எண்.61/5-ல் ஏக்கர் 3.27 சென்ட் பூமியை செங்கோடன் மற்றும் பழனிசாமி ஆகியோர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றும்,

மனுதாரர் அந்த சொத்தில்தான் பாகம் கேட்க முடியும் என்றும், தாவா சொத்துக்களில் மனுதாரருக்கு உரிமை ஏதும் இல்லை என்றும், பகுதி பாகப் பிரிவினைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அவசியமான தரப்பினர்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

9. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், 08.02.2007, 29.03.2010 மற்றும் 05.03.2021 – ஆகிய தேதிகளிட்ட கிரயப்பத்திரங்கள் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றும், வாதியின் பங்கை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரியும், நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.2/2023 மனுவில் மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்ய 22.11.2024, 25.11.2024 ஆகிய தேதிகளில் கால அவகாசம் அளிக்கப்பட்டது. மனுதாரருக்கு பதிலுரை தாக்கல் செய்ய மற்றொரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. 5–வது எதிர் மனுதாரர் கூடுதல் எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து மனுதாரர்/வாதி பதிலுரை தாக்கல் செய்ய வேண்டும் என கூறப்பட்டது. 5–வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையில் உள்ள சங்கதிகளை மறுக்க வேண்டும் என்றும், வாதியின் பதிலுரையை ஏற்க வேண்டும் என்றும் கூறப்பட்டது ஏற்கும் படியாக உள்ளது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்கும் படியாக உள்ளது. விசாரணை நீதிமன்றம் இரு தரப்பிலும் அவர்களது தரப்பை எடுத்துரைக்க வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம் ஆகின்றது. அசல் வழக்கானது பகுதி பாக பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்தும், அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா? என்பது குறித்தும் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளித்த பிறகு அசல் வழக்கில் தான் தீர்மானிக்க இயலும். தற்போது அது குறித்து இந்த மனுவில் தீர விசாரணை செய்து கருத்து கூறினால் அது அசல் வழக்கின் விசாரணையை பாதிப்படைய செய்யும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்கண்ட பரிசீலனைகளின் படி இந்த மனு அனுமதிக்கத் தக்கது என

பிரச்சினையின் மீது தீர்வு காணப்படுகிறது.

10. முடிவில், மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RAMAKRISHNAN
Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2024.12.16 06:22:44 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

N RAMAKRISHNAN
Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2024.12.16 06:22:52 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.